**செய்தி வெளியீடு எண்.399** **நாள் 2.7.2007**

## <u>தென் இந்திய இரயில் சுற்றுலா</u>

தென் இந்தியாவில் உள்ள சுற்றுலாப் பகுதிகளை. சுற்றுலாப் பயணிகள் எளிதில் கண்டு களிக்க வேண்டும் என்ற நோக்கத்தோடு **"<u>தென் இந்திய சுற்றுலா இரயில்</u>"** ஒன்றினை (Southern Splendour) அறிமுகப்படுத்த முடிவு செய்யப்பட்டுள்ளது. இந்த திட்டத்திற்கு ரூ.40.00 கோடி செலவு ஆகும் என திட்டமிடப்பட்டுள்ளது. இத்தொகையை கீழ்க்கண்டவாறு பகிர்ந்து கொள்ளவும் முடிவு செய்யப்பட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| மைய அரசு சுற்றுலாத்துறை நிதி உதவி | : | ரூ. .10.00 கோடி |
| இரயில்வே நிருவாகம் | : | ரூ. 10.00 கோடி |
| தென் இந்திய மாநிலங்கள் | : | ரூ. 20.00 கோடி (ஆந்திரபிரதேசம், தமிழ்நாடு, கேரளா, கர்நாடகம்,பாண்டிச்சேரி) |

இந்த இரயில் கீழ்க்கண்ட இடங்களுக்குச் சுற்றுலாப் பயணிகளை அழைத்துச் செல்லும்.

| | | |
|---|---|---|
| ஆந்திர பிரதேசம் | – | விசாகப்பட்டினம், திருப்பதி, வாரங்கல், புட்டபர்த்தி |
| தமிழ்நாடு | – | சென்னை, மதுரை, கன்னியாகுமரி, காஞ்சிபுரம், தஞ்சாவூர் |
| கேரளா | – | திருவனந்தபுரம், கொச்சி, குருவாயூர், பாலக்காடு |
| கர்நாடகா | – | பெங்களூர், மைசூர், ஹாசன், ஹலிபெட் |
| பாண்டிச்சேரி | | |

இத்திட்டத்தினை செயல்படுத்தும் பொறுப்பு ஆந்திர மாநில சுற்றுலா வளர்ச்சிக் கழகத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இத்திட்டம் 2008 ஆம் ஆண்டு இறுதியில் செயல்படுத்தப்படவுள்ளது.

இதற்கிடையில் வெளிமாநிலங்களிலிருந்து தமிழ்நாட்டிற்கு வரும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கையை அதிகரிக்க தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகமும், இரயில்வே நிருவாகமும் இணைந்து இரயில் மற்றும் பேருந்து சுற்றுலாவினை (Rail cum Road Tour) கீழ்க்கண்ட இடங்களில் இருந்து நடத்தி வருகிறது.

1) மும்பை
2) கொல்கத்தா
3) அகமதாபாத்
4) ஜெய்ப்பூர்
5) டில்லி

இத்திட்டத்தின்படி சுற்றுலாப் பயணிகளுக்கு உறுதி செய்யப்பட்ட இரயில் டிக்கெட்டுகள் வழங்கப்படுகின்றன. சென்னையை சேர்ந்தவுடன் சுற்றுலாப் பயணிகள் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக சொகுசுப் பேருந்துகளின் மூலம், தமிழ்நாட்டில் உள்ள சுற்றுலாப் பகுதிகளான சென்னை, காஞ்சிபுரம், மாமல்லபுரம், சிதம்பரம், தஞ்சாவூர், கன்னியாகுமரி, மதுரை,

இராமேசுவரம், கொடைக்கானல் மற்றும் திருப்பதி ஆகிய இடங்களுக்கு அழைத்துச் செல்லப்பட்டு மீண்டும் அவர்கள் சென்னை இரயில் நிலையத்தில் வழியனுப்பி வைக்கப்படுவார்கள். 2006–2007 ஆம் ஆண்டில் 1262 சுற்றுலாப் பயணிகள் இந்த பயணத்தில் கலந்துகொண்டுள்ளார்கள். இதன் மூலம் கிடைத்த வருவாய் ரூ.93.89 இலட்சம். 2005–2006 ஆம் ஆண்டில் 408 பயணிகள் மட்டுமே கலந்து கொண்டனர். இதன் மூலம் கிடைத்த வருவாய் ரூ.35.59 இலட்சம். சுற்றுலாத்துறை எடுத்துக் கொண்ட சீரிய முயற்சியின் காரணமாக 2006–2007 ஆம் ஆண்டில் இரயில் மற்றும் பேருந்து சுற்றுலாவில் அதிக அளவில் சுற்றுலாப் பயணிகள் கலந்துகொண்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.

வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளை ஈர்க்கும் வகையில் , தமிழ்நாடு சுற்றுலாத்துறை வெளிநாடுகளில் நடைபெறும் சுற்றுலாச் சந்தைகளில் (W.T.M.-லண்டன், I.T.B.- பெர்லின்) கலந்துகொண்டு தமிழ்நாட்டின் சுற்றுலாச் செல்வங்களை எடுத்துக் கூறிவருகிறது. இதன் காரணமாக 2006 ஆம் ஆண்டில் தமிழ்நாட்டிற்கு 13.35 இலட்சம் வெளிநாட்டுப் பயணிகள் வருகைபுரிந்துள்ளனர். 2005 ஆம் ஆண்டில் 11.79 இலட்சம் வெளிநாட்டுப் பயணிகள் வருகை புரிந்தனர். தமிழ்நாடு சுற்றுலாத்துறை எடுத்துக்கொண்ட சீரிய முயற்சிகள் காரணமாகத்தான், 2006–ஆம் ஆண்டில் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் தமிழ்நாட்டிற்கு அதிக அளவில் வருகை புரிந்துள்ளனர்.

வெளியீடு இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை – 9